**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.90/2019**

02.02.2026 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.R.பிரமிளா தேவி, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 1 செல்வம் த/பெ.லட்சுமி நாராயணன்: 5 மற்றும் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

வழக்கு சொத்துக்கள் அனைத்தும் குப்புசாமி என்ற நாராயண ரெட்டியார் அவர்களால் கிரையம் பெறப்பட்டவை என்றால் சரிதான். குப்புசாமி என்ற நாராயண ரெட்டியார் 1950ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினைக்கு முன்பாகவே காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அவருடைய இறப்பு சான்று நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காலம் சென்ற 1ம் வாதி என் தாயார் என்றால் சரிதான். என் தாயார் இறப்பதற்கு முன்பு உயில் ஏதாவது எழுதிவைத்தாரா என்றால் இல்லை. என் தாயார் பிறந்த தேதி தெரியுமா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. குப்புசாமி என்ற நாராயண ரெட்டியார் என்பவரும் கோழிபாக்கம் நாராயணசாமி ரெட்டியார் என்பவரும் வேறு வேறு நபர்கள் என்றால் சரிதான். கோழிபாக்கம் நாராயணசாமி என்பவர் 5ம் எதிர்வாதியின் தாய்வழி தாத்தா என்றால் சரிதான். குப்புசாமி என்ற நாராயண ரெட்டியாரின் சொத்துக்களை அவருடைய மக்கள் 1950ம் ஆண்டில் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் பாகம் பிரிக்கப்பட்ட சொத்துக்கள் A முதல் H ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ளன என்றால் சரிதான். A ஷெட்யூல் ராமசாமி ரெட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 5ம் எதிர்வாதி பாபு என்ற சாந்தாராம் என்பவர் மேற்படி ராமசாமி ரெட்டியாரின் மகன் என்றால் சரிதான். B ஷெட்யூல் சொத்து என் தாயாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். E ஷெட்யூல் உதயகுமார் மற்றும் ராமசாமிக்கு

பொதுவாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். E ஷெட்யூல் சொத்து சம்மந்தமாக 1981ம் ஆண்டு திருக்கோவிலூர் நீதிமன்றத்தில் ராமசாமி ரெட்டியாருக்கும் உதயகுமாருக்கும் இடையில் ஒரு வழக்கு நடந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கின் தீர்ப்பு நகல் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு 5 மற்றும் 14 பிரதிவாதிகளும் தேவையற்ற நபர்கள் என்றால் 14ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு தேவையற்ற நபர், ஆனால் 5ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு தேவையான நபர்.

(19 மற்றும் 20 பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜராகவில்லை. அவர்கள் அழைக்கப்பட்டும் ஆஜர் இல்லை. அவர்கள் தொடர்ந்து ஆஜராகாத காரணத்தால் அவர்கள் தரப்பில் சாட்சியிடம் குறுக்குவிசாரணை இல்லை என்று பதிவு செய்யப்பட்டது)

PW2/20072024/OP332024

ARUMUGAM MANIMOZHI
Digitally signed by ARUMUGAM MANIMOZHI
Date: 2026.02.02 18:30:27 +0530

Principal Sessions Judge,
Villupuram.